குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில அரசு விருது!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.02.2026) தலைமைச் செயலகத்தில் குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய தென்காசி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகங்களின் சாதனைகளைப் பாராட்டி தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரா. அழகுமீனா அவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் டாக்டர் இரா.சுகுமார் அவர்களுக்கும் 2025ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில அரசு விருதுகள், பரிசுத் தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல இயக்குநர் திருமதி.மா.சௌ. சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை, பிப்.28–

குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய தென்காசி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகங்களின் சாதனைகளைப் பாராட்டி அம்மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு 2025–ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில அரசு விருதுகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில் குழந்தைகள் பாலின விகிதத்தை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய தென்காசி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகங்களின் சாதனைகளைப் பாராட்டி அம்மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு 2025-ஆம் ஆண்டிற்கான பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில அரசு விருதுகள், பரிசுத் தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கி சிறப்பித்தார்.

தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி மற்றும் நலனை உறுதிப் படுத்தி, பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்துவதில் சிறப்பாக செயலாற்றும் மாவட்ட நிர்வாகங்களை பாராட்டும் நோக்கில், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும், பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி 24-ஆம் நாள் மாநில அரசு விருதுகளை வழங்கி சிறப்பித்து வருகிறது.

அந்த வகையில், 2025-26-ஆம் ஆண்டிற்கான விருதிற்காக மாவட்டங்களின் செயல்பாடுகள் விரிவாக மதிப்பீடு செய்யப்பட்டன. பிறப்பு பாலின விகித உயர்வு, 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பு விகிதக் குறைப்பு, கருக்கலைப்பு விகிதக் குறைப்பு, கர்ப்பத்திற்கு முந்தைய மற்றும் பிரசவத்திற்கு முந்தைய நோயறிதல் நுட்பங்கள் சட்டம் 1994 (PCPNDT Act) வலுவான அமலாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் ஆய்வு செய்யப்பட்டன.

அதன் அடிப்படையில், 2025-ஆம் ஆண்டில் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்த சிறப்பாக செயலாற்றிய முதல் மூன்று மாவட்ட நிர்வாகங்களாக முறையே தென்காசி, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் இம்மாவட்ட நிர்வாகங்களின் சாதனைகளைப் பாராட்டி, முதல் பரிசாக ரூ.1,00,000/- ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுப் பத்திரத்தினை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அவர்களுக்கும், இரண்டாம் பரிசாக ரூ.75,000/- ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுப் பத்திரத்தினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ரா.அழகுமீனா அவர்களுக்கும்,, மூன்றாம் பரிசாக ரூ.50,000/- ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுப் பத்திரத்தினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் டாக்டர் இரா.சுகுமார் அவர்களுக்கும் வழங்கி சிறப்பித்தார்.

இம்மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதில் முக்கிய பங்காற்றிய பங்குதாரர்கள் (Stakeholders) அனைவருக்கும் பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குவதற்கும், குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்கு தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் இப்பரிசுத் தொகை பயன்படுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல இயக்குநர் திருமதி. மா.சௌ.சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அம்பேத்கரின் எழுத்துக்கள் - பேச்சுக்கள் - ஆவணங்களைத் தொகுத்து

முனைவர் கவுதம சன்னா வழங்கியுள்ள "அம்பேத்கரியம்" நூல்கள்!

முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் கௌதம சன்னா, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்கள் பேச்சுக்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தொகுத்து வழங்கியுள்ள "அம்பேத்கரியம்" நூல்களை அறிமுகப்படுத்தினார். இத்தொகுப்பில் 50 நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நிகழ்ச்சியில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல், திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, ஜெர்மனி தலைவர் முனைவர் க. சுபாஷிணி, செந்தில்குமார், மருத்துவர் பாலகுமாரன், மாணிக் ராஜேந்திரன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, பிப்.28–

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்கள் பேச்சுக்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தொகுத்து முனைவர் கௌதம சன்னா அவர்கள் வழங்கியுள்ள "அம்பேத்கரியம்" நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தலைமைச் செயலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் கௌதம சன்னா அவர்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்கள் பேச்சுக்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தொகுத்து வழங்கியுள்ள "அம்பேத்கரியம்" நூல்களை அறிமுகப்படுத்தினார். இத்தொகுப்பில் 50 நூல்கள் இடம் பெற்றுள்ளன.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிந்தனைகளும் படைப்புகளும் கால வரிசைப் படியும், அவரின் சிந்தனை முறைமை படியும் தொகுக்கப் படாமல் இருந்த நிலையில், முனைவர் கௌதம சன்னா அவர்கள் "அம்பேத்கரியம்" என்ற பொதுத் தலைப்பின் கீழ் காலவரிசைப்படி 50 தொகுதிகளாகத் தொகுத்துள்ளார்.

இத்தொகுப்பு "அம்பேத்கரியம்" என்ற கருப்பொருளில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் அனைத்து ஆவணங்களும் முறையாகத் தமிழில் தொகுக்கப்பட்ட முதல் முயற்சியாகும். அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்கள் பேச்சுக்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியன முறையாக தொகுக்கப்பட்டு இவற்றில் இடம் பெற்றுள்ளன. இத்தொகுப்பு முதன் முறையாக தமிழில் வெளிவருவது சிறப்பம்சமாகும்.

அதுமட்டுமின்றி, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் எழுதி நூலாக வெளிவராத "ஒதுக்கப்பட்ட மக்கள்" மற்றும் அவரின் கடிதங்கள் முதல்முறையாக நூலாக்கம் பெற்று இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

மொத்தம் சுமார் 23,000 பக்கங்கள் கொண்ட இத்தொகுப்பு 30.1.2026 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல் திருமாவளவன் அவர்கள் தலைமையில் எழும்பூர் சென்னை அருங்காட்சியக அரங்கில் வெளியிடப் பட்டது.

இன்றைய நிகழ்ச்சியில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி, தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, ஜெர்மனி தலைவர் முனைவர் க.சுபாஷிணி, செந்தில்குமார், மருத்துவர் பாலகுமாரன், மாணிக் ராஜேந்திரன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் – சாமிநாகப்பன் படையாட்சி – வை. நாடிமுத்துப்பிள்ளை – வேதநாயகம் பிள்ளை திருவுருவச் சிலைகள் திறப்பு!

சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத் தூண் மண்டபம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருத்தணியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை, தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் 4.70 கோடி ரூபாய் செலவில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம், சுதந்திரப் போராட்ட தியாகி சாமிநாகப்பன் படையாட்சி அவர்களுக்கு மயிலாடுதுறையில் 44,40 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகி வை. நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு பட்டுக்கோட்டையில் 38 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், சேலத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத் தூண் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ். செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை, பிப்.28–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருத்தணியில் 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை, தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் 4.70 கோடி ரூபாய் செலவில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம், சுதந்திரப் போராட்ட தியாகி சாமிநாகப்பன் படையாட்சி அவர்களுக்கு மயிலாடுதுறையில் 44.40 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை மற்றும் சுதந்திரப் போராட்ட தியாகி வை. நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு பட்டுக்கோட்டையில் 38 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச் சிலை ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், சேலத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத் தூண் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவுருவச் சிலை

2024-25 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், ஆசிரியராகப் பணிபுரிந்த மிகப்பெரும் கல்வியாளரும், பல்கலைக்கழக ஆணையத்தின் தலைவராகத் திகழ்ந்தவரும், பல்கலைக்கழகம் மற்றும் பள்ளிக்கல்வித் துறையில் சிறப்பான கொள்கைகளை வருத்தவரும், சுத்திர இந்தியாவின் இரண்டவது குடியரசுத் தலைவராக விளங்கியவருமான பரத ரத்னா டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் திருவுருவச்சிலை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு திருவுருவச் சிலை மற்றும் அரங்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2022-23-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின்படி, மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் 4.70 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை மற்றும் அரங்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட தியாகி சாமிநாகப்பன் படையாட்சி அவர்களுக்கு திருவுருவச் சிலை

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.07.2025 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தென்னாப்பிரிக்காவில் நடந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் கலந்துகொண்டு, உயிர்த் தியாகம் செய்த, சுதந்திரப் போராட்ட தியாகியான சாமிநாகப்பன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மயிலாடுதுறையில் அவரின் திருவுருவச் சிலை அரசால் நிறுவப்படும்" என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, மயிலாடுதுறை, தரங்கம்பாடி சாலை, நகர்ப்புற நலவாழ்வு மைய வளாகத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி சாமிநாகப்பன் படையாட்சி அவர்களுக்கு 44 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சுதந்திரப் போராட்ட தியாகி வை.நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு திருவுருவச் சிலை

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் 2024-2025-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், "இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்றவரும், பொதுமக்களால் தென்னாட்டு ஜவகர்" என்று அழைக்கப்பட்டவருமான பட்டுக்கோட்டை தியாகி வை. நாடிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் திருவுருவச் சிலை நிறுவப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, நாடியாம்மாள்புரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் நாடிமுத்துப் பிள்ளை அவர்களுக்கு 38 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

சேலம் மாவட்டத்தில் 22 சிறைத் தியாகிகள் நினைவுத் தூண் மண்டபம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.08.2025 அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26-வது மாநில மாநாட்டில், சேலம் சிறையில் 22 கம்யூனிஸ்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டதன் நினைவாக சேலத்தில் சிறைத் தியாகிகள் மணி மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், அஸ்தம்பட்டியில் 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள சேலம் சிறையில் உயிர்நீத்த 22 தியாகிகளின் நினைவுத் தூண் மண்டபத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ். செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா!

மார்ச் 1 அன்று அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குதல்!

மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிக்கை!

சேலம், பிப். 28 -

கழகத் தலைவர் அவர்கள் தனது 14வது வயதில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.கவை தொடங்கி தனது அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைத்தார்கள். வட்ட கழக பிரதிநிதி, மாவட்ட கழக பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், மாநில இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் சென்னை பெருநகர மேயர் கழக துணை பொதுச்செயலாளர், கழக பொருளாளர், செயல் தலைவர் என தனது கடின உழைப்பால் உயர்ந்த உத்தமதலைவர் கழகத் தலைவர் அவர்கள், கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைந்த இந்த மாபெரும் இயக்கத்தின் தலைவராக தாய்மொழி தமிழையும், தமிழ்நாட்டையும் உலகறிய செய்த பெருமைக்கு சொந்தக்காரர், ஈரோட்டு சிங்கம் தந்தை பெரியாரின் சுயமரியாதையும், தென்னாட்டின் பெர்னாட்சா பேரறிஞர் அண்ணாவின் கனவையும்,

தனது ஆற்றலால், போராட்ட குணத்தால் கழகத்தை கட்டிக்காத்த உலகெங்கும் இருக்கின்ற தமிழர் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உறுதியையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவர் நமது கழகத் தலைவர் ஆவார்கள். மக்களால் நேரடியாக சென்னை பெருநகர மேயராகப் பொறுப்பேற்று சிங்கார சென்னையாக மாற்றியதுடன், வியக்கத்தக்க மேம்பாலங்களை கட்டி சென்னையில் போக்குவரத்து நெரிச்சலை சீர்படுத்தினார்கள். 29.5.2009 தமிழ்நாடு அரசின் துணை முதல்வராக பொறுப்பேற்று ஜப்பான் நாட்டின் உதவியுடன் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்தியவர் நமது கழகத்தலைவர் அவர்கள். தமிழகம் முழுவதும் சுற்று பயணம் செய்து மகளிர் சுய உதவி குழுக்களுக்கு தாராளமாக நிதி வழங்கி, மகளிர் சுய உதவிக்குழுவை மேன்மைபடுத்தினார்கள்.

சுயமரியாதை, சமூகநிதி, சமத்துவம், சகோதரத்துவம், மாநில சுயாட்சி, இளைஞர் நலன் பெண்ணுரிமை, தமிழின மொழி பாதுகாப்பு ஆகிய அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே திராவிட மாடல் ஆட்சி என இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகிறார்கள். நமது கழக தலைவர் அவர்கள் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற கடந்த 5 ஆண்டுகளாக தமிழக முன்னேற்றத்திற்காக பல செயற்கரியத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக பெண்களின் முன்னேற்றித்திற்காக எண்ணற்ற திட்டங்கள் குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் மூலம் 1.31 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.1000/ வழங்கியது, புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் 12.36 இலட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ வழங்குவது, 6.23 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 1.41 இலட்சம் கோடி கடன் வழங்கியது, 14 வயதுடைய 30209 பெண் குழந்தைகளுக்கு கருப்பை வாய் புற்று நோய் தடுப்பூசி, 19 மாவட்டங்களில் பணிபுரியும் பெண்களின் நலனுக்காக உயர்தர தோழியர் விடுதி, மகளிர் விடியல் பயணம் மூலம் கட்டணமில்லா அரசு பேருந்தில் தினசரி 71.81 இலட்சம் மகளிர் பயணம் செய்ததின் மூலம் மாதம் ஒன்றுக்கு சுமார் 888 ரூபாய் சேமிப்பு, நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 48.65 இலட்சம் மாணவர்களுக்கும் திறன் பயிற்சி, 1.17 இலட்சம் பேராசியர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினிகள் வழங்கியது கிராமபுற மக்களின் கனவை நனவாக்கி கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் 2.75 இலட்ச வீடுகள் கட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.3.5 இலட்சம் அரசு மானியம் வழங்கியது, கடந்த 5 ஆண்டுகளில் 11.19ரூ பொருளாதார வளர்ச்சி இது நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தில் இரண்டு மடங்கு, தனி நபர் வருமானம் ரூ.3.6 இலட்சம் இது நாட்டின் சராசரி வளர்ச்சியை விட 1.77 மடங்கு அதிகம், அன்புக்கரங்கள் திட்டத்தின் மூலம் 10637 குழந்தைகள் கல்விபயில மாதம் ரூ.2000/ தாயுமானவன் திட்டத்தின் மூலம் 27.41 இலட்சம், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.1500/ மற்றும் "அரண் இல்லம்" விவசாய வளர்ச்சிக்கு 1.94 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீடு, உணவு தானியம் 16.22 இலட்சம் மெட்ரிக் டன் உயர்வு, 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, நம்மை காக்கும் 48 முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் மூலம் 20.59 இலட்சம் மாணவ மாணவியருக்கு ஊட்டச்சத்து மிக்க உணவு, பொங்கள் பரிசு 2 கோடியே 22 இலட்சம் குடும்பங்களுக்கு ரூ. 3000/ வழங்கியது, இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு அனைத்து துறை களிலும் முதன்மை மாநிலமாக உயர்த்தியது. இத்தகைய செயற்கறிய திட்டங்களை செயல்படுத்தி நெம்பர் 1 முதல்வராக விளங்கும் திராவிட மாடல் அரசின் நாயகனாக விளங்கும் நமது கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 01 இன உணர்வு, தமிழ் மொழி உணர்வுள்ள சான்றோர் பெருமக்களின் மனங்களில் மகிழ்ச்சி பொங்கிடும் திருநாள். அத்தகைய சிறப்புக்குரிய கழக தலைவர் அவர்களின் 73வது அகவையில் அடியெடுத்து வைக்கும் அந்நாளில் சேலம் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் எடப்பாடி, மேட்டூர், சங்ககிரி தொகுதியில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குதல், நகர, ஒன்றிய பேரூர், சிற்றூர், ஊர்கிளைகள் உட்பட அனைத்து பகுதிகளிலும் கழகத்தோழர்கள் கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்புகள் வழங்குவதுடன், மருத்துவ முகாம்கள், இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் விளை யாட்டுப் போட்டிகள், மரக்கன்றுகள் நடுதல், இரத்த தான முகாம்களை ஏற்பாடு செய்தல், ஏழை எளியோர் பயன் பெறும் வகையில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை மார்ச் மாதம் முழுவதும் சிறப்பாக ஏற்பாடு செய்து கொண்டாட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிக்கை விடுத்துள்ளார்.